உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிச்செய்த

# அர்த்தநாரீச்வர ஸ்தோத்ரம்

தமிழ் உரை:
ஞானபாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக
**பி. என். நாராயண சாஸ்திரிகள்**

[சிவஞான பூஜா மலர் - துந்துபி ஆண்டு - (1982)

பிரசுரம்: **ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா**, மேலமாம்பலம், சென்னை - 600 033]

**சாம்பேய கௌரார்த்தசரீரகாயை**
**கர்ப்பூரகௌரார்த்த சரீரகாய |**
**தம்மில்லகாயை ச ஜடாதராய**
**நம: சிஷாயை ச நம: சிவாய || 1 ||**

1. சம்பகமலர் போன்ற வெள்ளையான பாதி உடலை உடையவளும், கர்ப்பூரம் போன்று வெளுத்த பாதி உடலை உடையவரும், அழகான பின்னல்களை உடையவளும், ஜடை முடியைக் கொண்டவருமான ‘சிவா’ என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**கஸ்தூரிகா குங்குமார்ச்சிதாயை**
**சிதாரஜ: புஞ்ஜவிசர்ச்சிதாய |**
**ச்ருதஸ்மராயை விக்ருதஸ்மராய**
**நம: சிவாயை ச நம: சிவாய || 2 ||**

2. கஸ்தூரி குங்குமம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவளும், பஸ்மத்தால் பூசப்பட்ட உடலையுடையவரும், மன்மதனை உயிர்பெறச்செய்தவரும், காமனை எரித்தவருமான ‘சிவா’ என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**ஜணத்க்வணத் கங்கணநூபுராயை**
**பாதாப்ஜராஜத்பணி நூபுராய |**
**ஹேமாங்கதயை புஜகாங்கதாய**
**நம: சிவாயை ச நம: சிவாய || 3 ||**

3. ஒலிக்கிறக் காப்பு கால் கொலுஸுகளையுடையவளும், பாம்புகளாகிற கால் சலங்கையை உடையவரும், தங்கத்தினாலான தோள்வளைகளை உடையவளும்,

பாம்பையே தோள்வளையாகக் கொண்டவருமான 'சிவா' என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**விசாலநீலோத்பல லோசநாயை**
**விகாஸிபங்கேருஹ லோசநாய |**
**ஸமேக்ஷணாயை விஷமேக்ஷணாய**
**நம: சிவாயை ச நம: சிவாய || 4 ||**

4. அலர்ந்த கருங்குவளைமலர் போன்ற விழிகளை உடையவளும், மலர்ந்த தாமரை போன்ற கண்களை உடையவரும், நேரான கண்களை உடையவளும், முக்கண்ணருமான 'சிவா' என்ற அம்பிகைக்கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**மந்தாரமாலா கலிதாலகாயை**
**கபாலமாலாங்கித கந்தராய |**
**திவ்யாம்பராயை ச திகம்பராய**
**நம: சிவாயை ச நம: சிவாய || 5 ||**

5. மந்தார மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட முடியை உடையவளும் கபால மாலைகளை கழுத்திலணிந்தவரும், நல்ல பட்டுவஸ்திரங்களை யணிந்தவளும், திசைகளையே வஸ்திரமாகக் கொண்டவருமான 'சிவா' என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**அம்போதரச்யாமல குந்தலாயை**
**தடித்ப்ரபாதாம்ர ஜடாதராய |**
**நிரீச்வராயை நிகிலேச்வராய**
**நம: சிவாயை ச நம: சிவாய || 6 ||**

6. மேகம்போல் கருத்த முன்மயிர்களையுடையவளும் மின்னல் ஒளிபோல் சிவந்த ஜடைமுடியுடையவரும், தனக்கு மேல் இல்லாதவளும், உலகுக்கெல்லாம் ஈசனுமான 'சிவா' என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**ப்ரபஞ்சஸ்ருஷ்ட்யுன்முக லாஸ்யகாயை**
**ஸமஸ்த ஸம்ஹாரக தாண்டவாய |**
**ஜகஜ்ஜனந்யை ஜகதேகபித்ரே**
**நம: சிவாயை ச நம: சிவாய || 7 ||**

7. உலகைப் படைக்கும் நடனத்தைக்கொண்டவளும் எல்லாவற்றையும் அழிக்கும் ஆனந்த தாண்டவரும், உலகுக்குத் தாய்தகப்பன்களுமான 'சிவா' என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**ப்ரதீப்தரேகோஜ்வல குண்டலாயை**
**ஸ்புரன்மஹா பன்னகபூஷணாய ।**
**சிவாந்விதாயை ச சிவாந்விதாய**
**நம: சிவாயை ச நம: சிவாய ॥ 8 ॥**

8. ஒளி விடுகிற காதுகுண்டலங்களை உடையவளும் பெரிய பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டவரும், எப்பொழுதும் மங்களமான உருவங்கொண்டவர்களுமான 'சிவா' என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

**ஏதத்படேத் அஷ்டகமிஷ்டதம்யோ**
**பக்த்யா ஸ மான்யோ புவிதீர்க்கஜீவீ ।**
**ப்ராப்நோதி ஸௌபாக்யம் அனந்தகாலம்**
**பூயாத்ஸதா தஸ்ய ஸமஸ்தஸித்தி: ॥ 9 ॥**

9. எவனொருவன் இந்த எட்டு சுலோகங்களைப் படிக்கிறானோ அவன் உலகில் புகழ்பெற்ற நீண்ட ஆயுளுடன் வெகுகாலம் தனக்கு வேண்டியவைகளை அடைந்து எல்லா வித ஸித்திகளையும் நன்கு பெற்று விளங்குவான்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய அர்த்தநாரீச்வர ஸ்தோத்ரம்
தமிழ் உடையுடன் முற்றிற்று.

சிவம்.